

**முனைவர் பாண்டிய ராஜா**

பரமசிவம் பொன்னுத் தாயின் மகன்; ஆசிரியப் பெற்றோரின் மகன் தேனி, சின்னமனூர் அருகில் உள்ள ஓடைப் பெட்டியில் பிறந்தவர்; ஓடைப் பெட்டியிலும் சுக்காங்கல் பட்டியிலும் படுமலையிலும் பள்ளிக் கல்வியை நிறைவு செய்தவர். (1947-1958)

மதுரை தியாகராசர் கல்லூரியிலும் அமெரிக்கன் கல்லூரியிலும் மதுரைக் கல்லூரியிலும் கல்லூரிப் படிப்பை (1958-1964) நிறைவு செய்தவர்; கணிதம் பயின்றவர்; கணிப்பொறி வரவை ஏற்றுக் கொண்டவர்.

பேராசிரியப் பணியை நிறைவு செய்தவர் (1964-2001), எனினும் இன்றுவரை தமிழ் மொழிக்குத் தரவுகளைப் பொத்தானைத் தொட்டவுடன் தமிழ்க்கடலை நீந்துவதற்கு அறிந்து கொள்ள தகவல்களை மின் ஊடகத்தில் மின் நூல்களாகத் தந்து கொண்டேயிருப் பவர்.

சொற்களின் தகவல்களை அறிய நூலகம் செல்ல வேண்டும். அல்லது நூல்களை விலைக்கு வாங்க வேண்டும். வாங்கும் நூல்களும் நாம் அறிய விரும்பும் தகவல் களை முழுமையாகத் தருமா எனச் சொல்ல இயலாது. இந்நிலையை மாற்றி இணைய தளத்துக்குள் சென்றால் முனைவர் பாண்டிய ராஜாவின் வலைத்தளத்துள் நோக்கு நூல் களின் தகவல் சுரங்கத்தைக் காணமுடியும். Tamil concordance என்னும் பெயரில் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள், சங்க இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் திருக் குறளுக்கு மட்டும் ஐம்பெருங்காப்பியங்கள் ஐஞ்சிறுங் காப்பியங்கள் கம்பராமாயணம் பெருங்கதை வில்லிபாரதம் பக்திஇலக்கியம் பாரதியார் கவிதைகள் சிற்றிலக்கியங்கள் நீதி நூல்கள் சித்தர் பாடல்கள் ஓர் எழுத்தைத் தொட்டால் அந்த எழுத்தில் தொடங்கும் எல்லாச் சொற்களின் கூட்டுத் தொடரடை வுகளுக்குரிய பாடல் அடிகள் திரையில் தெரியும். - இவை மட்டும் அல்ல. சொல்லடைவு நூல்கள் அந்தச் சொல் பயின்று வரும் பாடல் எண்களை மட்டும் தரும். நாம் நூல்களை எடுத்துக் கண்டறிய வேண்டும்.

இச்சொல்லைடைவில் சொற்களின் எண் களைக் தொட்டால் அது மூல நூலுக்கு அழைத்துச் செல்லும். அத்துடன் மூல நூலான பாடலுக்கு உரிய பொருள் வலது பக்கத்தில் இருக்கும். சொல்லாய்வும் செய்கிறார். கணிப்பொறிப்பேராசிரியராகப் பணிநிறைவு பெற்ற பிறகும் தொடர்ந்து தமிழ்ப்பணி செய்துவருகிறார். கோடிக் கணக்கில் பணமும் பல பணியாளர்கள் கூடிச் செய்யுமா பணியை ஆரவாரமின்றிச் செய்து கொண்டிருக்கின்றார். அவர் தன் பணி பற்றிச் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தில் உரையாற்றினார். அப்பொழுது கம்பராமாயணம் சொல்ல டைவை எப்படி எவ்வளவு நேரத்தில் செய்து முடித்தேன் என விளக்கினார். பாண்டிய ராஜா என்னும் பெயர் காரணப்பெயர்தான் என்று தோன்றியது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் பாண்டியர்கள். இவர் கணிப்பொறி வழி வலைத்தளத்தில் தமிழ் வளர்த்துக் கொண்டிருக்கின்றார். குறுந்தொகை ஒலிஉரை நயமுறச் செய்வதற்கு ஐயா அவர்களின் சங்க இலக்கியச் சொல்லடைவுதான் ஆகச் சிறந்த நோக்கு நூலாகும். தமிழ் ஆய்வாளர்களுக்கு ஆகச் சிறந்த நோக்கு நூலகம்.

ஒவ்வாமை, மூச்சுத் திணறல் போன்ற உடல் குறித்த சிக்கல்; நூலகத்தில் நூல்களைத் தேடுவதில் சிக்கல்; கிடைத்தாலும் பெறுவதில் சிக்கல் போன்ற தடைகளை எல்லாம் கடப்பதற்கு ஒளியும் வழியும் காட்டிய ஆற்றல்சார் பேராசிரியர்.

1000 பிறைகண்ட பேரா. இன்னும் இலக்கண இலக்கியச் சொல்லாடைவுகளை உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்.

அன்னாரின் தமிழ்ப்பணி தொடர வேண்டுகிறோம்.

Concordance for Tamil Literature

http://tamilconcordance.in/

**சிற்றிலக்கியங்கள் எனத் தொல்காப்பியம் முதல் இக்காலம் வரை உள்ள நூல்களைத் தெரிவு செய்து சொல்லடைவும் தொடர டைவும் தந்து கொண்டே இருக்கின்றார். அவை ஆய்வாளர்களுக்கு அள்ள அள்ளக் குறையாத தகவல் சுரங்கம்**

**ப.பாண்டிய ராஜா**

**- த. வசந்தாள், தமிழ்ப் பேராசிரியர், பணிநிறைவு, எதிராஜ் மகளிர் கல்லூரி, சென்னை**